The Hindu (Tamil)

Dated: 27-06-2024

# விக்கிரவாண்டி களத்தில் 29 வேட்பாளர்கள்

● விழுப்புரம்

விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தல் களத்தில் திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 29 பேர் உள்ளனர்.



↑ விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பணி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

விக்கிரவாண்டி தொகுதி எம்எல்ஏ புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6-ம் தேதி உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். இதை யடுத்து, தலைமை தேர்தல் ஆணை யம் ஜூலை 10-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என அறிவித் தது. இதையொட்டி, கடந்த 14 -ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங் கியது. கடந்த 24-ம் தேதி மனுக்கள் மீதான பரிசீல்லனை நடைபெற்றதில், தாக்கல் செய்யப்ப்பட்ட 64 மனுக் களில் 35 மனுக்கள் நிராகரிக்கப் பட்டன.

இந்நிலையில், இறுதிப்பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. 29 வேட்பாளர்களுக்கு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த தேர்தலை பிரதான எதிர்க்கட்சியான அதிமுக புறக்கணித்துள்ள நிலையில், திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி ஆகியவை களத்தில் உள்ளன.

பாமக, நாம் தமிழர் கட்சி ஆகியவை தேர்தல் ஆணையத் தில் கேட்டுக் கொண்டதன் அடிப் படையில் பாமகவுக்கு மாம்பழம், நாம் தமிழர் கட்சிக்கு மைக் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.34 லட்சம் வாக்காளர்கள்

விக்கிரவாண்டி தொகுதியில் 1 லட்சத்து 15 ஆயிரத்து 749 ஆண்கள், 1 லட்சத்து 18 ஆயிரத்து 393 பெண்கள் மற்றும் 3 இதர வாக்காளர்கள் என மொத்தம் 2 லட்சத்து 34 ஆயிரத்து 145 பேர் வாக்களிக்கின்றனர்.

வேட்பாளர் இறுதிப் பட்டியல் நேற்று வெளியிடப் பட்டதை தொடர்ந்து, இன்று முதல் தேர்தல் பிரச்சாரம் தீவிர மடையும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. ஜூலை 8-ம் தேதி பிரச்சாரம் ஓய்வடைகிறது.

29 persons are going to participate in the Vikravandi By elections.

The work of assigning symbols to the Candidates was held yesterday in the presence of D.E.O & A.R.Os

Daily Thanthi

Dated: 27-06-2024

### இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு:

# விக்கிரவாண்டி தொகுதியில் 29 பேர் போட்டி

## சின்னங்களும் ஒதுக்கீடு

விழுப்புரம், ஜூன்.27-
விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி 29 பேர் தேர்தல் களத்தில் போட்டியில் உள்ளனர். அவர்களுக்கான சின்னங்களும் ஒதுக்கீடுசெய்யப்பட்டன.

**இடைத்தேர்தல்**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் புகழேந்தி (வயது 70). இவர் உடல்நலக்குறைவால் கடந்த ஏப்ரல் மாதம் 6-ந் தேதி மரணம் அடைந்தார்.

இதைத்தொடர்ந்து அதே மாதம் 8-ந் தேதி, விக்கிரவாண்டி தொகுதி மீண்டும் காலியானதாக அறிவிக்கப்பட்டதோடு, இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10-ந் தேதி நடைபெறும் என தேர்தல் கமிஷன் அறிவித்தது.

**56 பேர் மனுதாக்கல்**

இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 14-ந்தேதி தொடங்கி 21-ந்தேதியுடன் முடிவடைந்தது. இதில் தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 56 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

ஒரே வேட்பாளர் கூடுதலாக மனுதாக்கல் செய்ததன் அடிப்படையில் மொத்தம் 64 மனுக்கள் பெறப்பட்டன.

இந்த வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை கடந்த 24-ந்தேதி நடந்தது. அப்போது 29 வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்கப்பட்டன. 35 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

**இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு**

இதனை தொடர்ந்து வேட்பு மனுக்களை வாபஸ் பெற 2 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டு 26-ந் தேதி மாலை 3 மணிக்கு மேல் இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நேற்று மாலை 3 மணி வரை ஆகியும் 29 பேரில் யாரும் வேட்பு மனுவை வாபஸ்பெறவில்லை.

இதையடுத்து தேர்தல் நடத்தும் அலுவலகமான விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் யுவராஜ் ஆகியோர் வேட்பாளர்கள் முன்னிலையில் இறுதி பட்டியலை வெளியிட்டனர்.

**களத்தில் 29 பேர்**

அதன்படி தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர் அபிநயா உள்பட 29 பேர் தேர்தல் களத்தில் போட்டியில் உள்ளனர்.

இதையடுத்து இவர்கள் 29 பேருக்கும் உடனடியாக சின்னங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

**மும்முனைப் போட்டி**

அ.தி.மு.க., தே.மு.தி.க. இந்த தேர்தலை புறக்கணித்துவிட்டதால் விக்கிரவாண்டியில் ஆளுங்கட்சியான தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சிகளுக்கிடையே தான் மும்முனைப் போட்டி நிலவுகிறது.

அதிலும் குறிப்பாக வெற்றிக்கனியை பறிக்க தி.மு.க. மற்றும் பா.ம.க. வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் மல்லுக்கட்டிக் கொண்டு தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

29 persons are going to participate in the Vikravandi By elections
The work of assigning symbols to the candidates was held yesterday in the presence of D.E.O & A.R.O.s

Dinamalar

Dated: 27.06.2024


# விக்கிரவாண்டி இடைத்தேர்தல் 29 வேட்பாளர்கள் போட்டி

**விக்கிரவாண்டி, ஜூன் 27–**

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில், இறுதி வேட்பாளர் பட்டியலில் 29 பேர் இடம் பெற்றுள்ளனர்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வரும் ஜூலை 10ம் தேதி நடைபெற உள்ளது. கடந்த 24ம் தேதி நடந்த வேட்புமனு பரிசீலனையில், மனு தாக்கல் செய்த 64 பேரில், 35 பேரின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 29 மனுக்கள் ஏற்கப்பட்டன.

வேட்பு மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளான நேற்று பிற்பகல் 3:00 மணி வரை யாரும் வாபஸ் பெறாத நிலையில், மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட 29 பேருக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில் நடந்தது.



விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில், இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யும் பணி நேற்று நடந்தது.

அங்கீகரிக்கப்பட்ட பிரதான கட்சிகளான தி.மு.க., – பா.ம.க., நாம் தமிழர் கட்சிகளுக்கு கடந்த லோக்சபா தேர்தலில் ஒதுக்கப்பட்ட சின்னங்களே ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள சுயேச்சைகள் 26 பேருக்கும் சுயேச்சை சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

தேர்தலில் 29 பேர் போட்டியிடுவதால், இரண்டு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

29 persons are going to participate in the vikrawandi By elections.